7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

(ஆ) வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமா வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் "

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)
மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) குற்றவியல் சட்டங்கள் சார்ந்த (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு குற்றவியல் சட்டங்கள் சார்ந்த (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்,